# நல்வழி காட்டிய பெரியார் 10

புத்தபெருமான் வாழ்ந்த காலத்தில் பிம்பிசாரன் என்ற மன்னன் ராஜகிருக நகரத்தை ஆண்டு வந்தான். புத்தபெருமான் அங்கு பிம்பிசார மன்னன் நடத்தும் கொடுமையான யாகம் பற்றிக் கேள்விப்பட்டார். உடனே யாகசாலைக்குப் புறப்பட்டார்.

யாகம் நடத்தும் இடத்தில் பலி கொடுப்பதற்காக ஓர் ஆட்டைக் கட்டிப் போட்டிருந்தனர். தீட்டிய கத்தியைக் கையில் ஏந்தியவாறு ஒருவன் கொடூரமான தோற்றத்தோடு நின்று கொண்டிருந்தான். புத்தர் இக்காட்சிகளைக் கண்டு திகைத்து நின்றார். அங்கு நடக்க இருந்த உயிர்க் கொலையைத் தடுக்க நினைத்தார்.

ஆட்டை வெட்டுவதற்கு வாளை ஓங்கியவனைத் தடுத்து நிறுத்தும்படி புத்தபெருமான் மன்னனை வேண்டினார். உடனே, அங்கிருந்தவர்கள் ஆட்டைக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்த்தார்கள். அச்சமயம் புத்தபெருமான் மன்னனை நோக்கி, ஓர் உயிரைக் கொல்வது மிக எளிது. ஆனால், துண்டித்த உடலை வேந்தனாலும் கூடத்திரும்பவும் எழுப்பிவிட முடியாது. ஆட்டினை அறுத்து அதன் இரத்தத்தை யாகத்தில் இட்டால் இறைவன் ஏற்றுக் கொள்வானா? புல்லைத் தின்னும் இந்த ஆடு உங்கள் பசிதீர்க்கப் பால் தருகின்றது; குளிரைப் போக்கக் கம்பளி தருகின்றன. இவற்றைக் கொல்கிறீரே? ‘‘இது நியாயமா? ’’ என்று கேட்டார்.

தொடர்ந்து அவர், ‘‘மன்னா, உயிர்களைக் கொல்லாது தானியங்கள், திரவியங்கள் போன்றவற்றைக் கொண்டு யாகம் செய். ஊன் உண்பதைத் தவிர்த்து மண்ணில் விளைவதை உண்டு வாழலாமே. வானம் தரும் நீரும் சுவை மிகுந்த காய்கனிகளும் மனிதர்களின் பசிதீரப் போதாதா, ’’ என்று கேட்டார்.

‘‘நெஞ்சினில் கருணை உடையவரே இந்த மண்ணில் சிறந்த வாழ்வு வாழ்பவர்,’’ என்று மேலும் மன்னனுக்கு அறிவுரை கூறினார்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

புத்தபெருமானுடைய அறிவுரைகளைக் கேட்டு மன்னன் பிம்பிசாரன் மனம் மாறினான். புத்தபெருமானின் கால்களில் விழுந்து வணங்கினான்.

''ஊனை உண்பதும், உயிர்க் கொலை செய்வதும் இனி இந்த நாட்டில் இல்லாமல் ஒழிக,'' என்று ஆணை இட்டான்.

**பாடத்தில் வரும் சில சொற்களும் பொருளும்**

| | | | | |
|---|---|---|---|---|
| யாகம் | - | வேள்வி / யாகம் | - | යාගය |
| வேண்டினார் | - | கேட்டார் | - | යදිනවා |
| ஊன் | - | இறைச்சி | - | මස් |
| கருணை | - | இரக்கம், காருண்யம் | - | දයාව / කරුණාව |
| ஒழிக | - | அழிக | - | නැතිවේවා |
| ஆணை | - | கட்டளை | - | අණ |
| பலி | - | | - | බිල්ල |

**கிரகித்தற் பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**
පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.

1. இப்பாடத்தில் வந்த மன்னனின் பெயர் என்ன?
2. யாகத்திற்கு பலி கொடுக்க இருந்த மிருகம் எது?
3. புத்தர் மன்னனுக்குக்கூறியது என்ன?
4. இந்த மண்ணில் சிறந்த வாழ்வு வாழ்பவர் யார்?


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு I

பின்வரும் வாக்கியங்களை சிங்களத்தில் எழுதுங்கள்.
පහත සඳහන් වාක්‍ය සිංහලට හරවා ලියන්න.

1. மன்னா! உயிர்களைக் கொல்வது பாவம்,
2. ஓர் உயிரைக் கொல்வது மிக எளிது.
3. கொன்ற உயிரைத் திருப்பி தர முடியுமா?
4. ஆடுகள் நமக்குப் பால் தருகின்றன.
5. புத்தரின் அறிவுரையைக் கேட்ட மன்னன் மனம் மாறினான்.

## செயற்பாடு II

கீழ்வரும் சொற்களுக்கான பொருளைத் தரும் சொற்களைக் கண்டறிந்து அவற்றை இணைக்குக.
**පහත සඳහන් වචනවලින් අර්ථය දෙන වචනය තෝරා යා කරන්න.**

| | |
|---|---|
| ● ஆண்டவன் | ● கட்டளை |
| ● இறைவன் | ● இரக்கம் |
| ● கருணை | ● உள்ளம் |
| ● வேந்தன் | ● ஆணை |
| ● மனம் | ● மன்னன் / அரசன் |

## செயற்பாடு III

**இறந்த காலம்**

நான் வந்தேன்.
நாங்கள் வந்தோம்.

1. நான் கேள்விப்பட்டேன்.

நாங்கள் -----------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

2. நான் ---------------------------------------
நாங்கள் புறப்பட்டோம்.

3. நான் ஆட்டைக் கட்டிப்போட்டிருந்தேன்.

நாங்கள் ---------------------------------------------

4. நான் -------------------------------------------
நாங்கள் நின்று கொண்டிருந்தோம்.

5. நான் திகைத்து நின்றேன்.
நாங்கள் திகைத்து -------------------------------------

6. நான் தடுக்க -----------------------------------
நாங்கள் தடுக்க நினைத்தோம்.

7. நான் மன்னனை வேண்டினேன்.

நாங்கள் மன்னனை -----------------------------------

8. நான் கட்டுகளை -------------------------------------
நாங்கள் கட்டுகளை அவிழ்த்தோம்.

9. நான் தந்தேன்.

நாங்கள் ----------------------------------------

10. நான் --------------------------------------------
நாங்கள் கேட்டோம்.

## செயற்பாடு IV

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.
පහත සඳහන් වචන යොදා වාක්‍ය සාදන්න.

நினைத்தீர்கள், கேட்டீர்கள், கூறினீர்கள், விழுந்தீர்கள், வணங்கினீர்கள், ஆணையிட்டீர்கள், வேண்டினீர்கள், அவிழ்த்தீர்கள்,


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**உதாரணம்:-**

நீங்கள் பரீட்சையில் சித்தியடைய நினைத்தீர்கள்.

1 ----------------------------------------------------------------------------------------------------

2 ----------------------------------------------------------------------------------------------------

3 ----------------------------------------------------------------------------------------------------

4 ----------------------------------------------------------------------------------------------------

5 ----------------------------------------------------------------------------------------------------

6 ----------------------------------------------------------------------------------------------------

7 ----------------------------------------------------------------------------------------------------

8 ----------------------------------------------------------------------------------------------------

## செயற்பாடு V

**உதாரணம் :-**

அவன் வந்தான்.
அவள் வந்தாள்.
அவர் வந்தார்.
அது வந்தது.
அவை வந்தன.

01. அவன் புறப்பட்டான்.
அவள் -------------------------------------
அவர் -------------------------------------
அது -------------------------------------
அவை -------------------------------------

02. அவன் -------------------------------------
அவள் நின்று கொண்டிருந்தான்.
அவர் -------------------------------------
அது -------------------------------------
அவை -------------------------------------

03. அவள் -------------------------------------

அவன் -------------------------------------

அவர் தடுக்கின்றார்.

அது -------------------------------------

அவை -------------------------------------

**04.** அவன் -------------------------------------

அவள் -------------------------------------

அவர் -------------------------------------

அது பசி தீர்த்தது.

அவை -------------------------------------

05. அவன் -------------------------------------

அவள் -------------------------------------

அவர் -------------------------------------

அது -------------------------------------

அவை வாழ்ந்தன.